1969 செப்டம்பர் 13]

வந்து சந்தையில் விற்கிறார்கள். இந்த வியாபாரம் நடக்கிறது, ஆகவே, இனியாகிலும் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுள்ள தகவலின்படி ஆங்காங்கு சிற்சில கற்கள் கிடைக்கின்றன என்பதுதான். தொடர்ச்சியாக ஆராய்ந்து—மிக அதிக அளவில் கிடைக்கக்கூடும் என்று ஏற்பட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

* 283. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether deposits of Barytes, mixed with Quartz occur over a wide area between Alangayam, and Andiappanur, Tirupathur taluk of North Arcot District?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆலங்காயத்திற்கும் ஆண்டியப்பனூருக்கும் இடையேயுள்ள கீழ்க்கண்ட பகுதிகளில் படிகக்கல்லும் (**Quartz**) பாரியக் கந்தகையும் **(Barytes)** கிடைப்பதாகத் தெரிய வந்துள்ளது.

1. நரசிங்கபுரம், காலாரப்பட்டி ஓதுக்கக் காட்டுப் பகுதி (சுப்ரமணியம் கோயில் பகுதி).
2. ஆண்டியப்பனூர்—லாலாப்பேட்டை பகுதி.

THIRU K. VINAYAKAM : If such deposits of Barytes mixed with quartz occur in these towns, what steps have Government taken to exploit these deposits?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில ஜியாலஜிகல் நிர்வாகமும், மத்திய உதவியுடன் கூடிய ஜியாலஜிகல் நிர்வாகமும் தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. அங்கு போதுமான அளவு அதிகமாகக் கிடைக்கக்கூடும் என்று தெரிந்தால் அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது முடிவு செய்யப்படும்.

திரு. மு. ச. சிவசாமி : *இந்த ஆண்டியப்பனூர் பக்கத்திலே கிடைப்பதாகச் சொல்லப்படுகின்ற பாரிடஸில் எத்தனை சதவீதம் குவார்டஸ் கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எத்தனை சதவீதம் என்ற தகவல் இல்லை.

" Bartytes occur along with quartz in the ratio of 2 :7 " என்ற தகவல் இருக்கிறது. இரண்டும் எந்த எந்த விகிதத்திலே கலந்து கிடைக்கின்றன என்ற தகவல்தான் இருக்கிறது.

* **284 வினா.—திரு. கே. போஜன் :** *மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய பாக்சைட்டின் அளவு எவ்வளவு ?